திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு துணைக் கேள்வி கேட்க முடியாத அளவுக்கு காலதாமதமாக பதில் வந்துள்ளதால் துணைக் கேள்வி கேட்க முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வினா 16-6-1986 அன்று போடப்பட்டது. 9-9-1986 அன்று தான் அதனுடைய விடை துறைக்கு வந்திருக்கிறது.

Foot ball stadium at Madras.

172—(* Q. No. 3977)—THIRU G. ANANTHA KRISHNA: Will the Hon. the Minister for Education and Law be pleased to state—

(*a*). Whether the Government has abandoned the programme to build a stadium for staging foot ball matches in Madras City ; and

(*b*) if not, what are the steps taken for constructing a foot ball stadium.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னையில் கால்பந்து விளையாட்டிற்கென நேரு விளையாட்டு அரங்கம் உள்ளது. கடந்த 1984-ம் ஆண்டு சந்தோஷ் கோப்பைக்கான கால்பந்து போட்டிகள் இங்கு நடத்தப்பட்டன. பன்னாட்டு அழைப்பு நேரு தங்கக் கோப்பைக்கான கால்பந்து போட்டிகள் நடத்துவதற்கென சென்னையில் கால்பந்து விளையாட்டு அரங்கம் கட்டும் செயற் குறிப்பு தற்போதுள்ள நிதிநிலை நெருக்கடியின் காரணமாக கைவிடப்பட்டது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் இன்டோர் ஆடிட்டோரியம் அமைப்பதாகவும், தமிழ்நாடு கூடைப்பந்து வளர்ச்சிக் கழகத்திடம் அதை ஒப்படைக்கப் போவதாகவும் ஏற்கெனவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தார்களே, அந்தச் செயற்குறிப்பு கைவிடப்பட்டதா? இல்லையெனில் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுங்கம்பாக்கம் மனமகிழ் மையத்திடம் உள்ள மைதானம் மற்றும் தரமணி ஆகிய இடங்களில் புதிதாக அரங்கம் கட்டலாம் என்ற செயற்குறிப்புதான் இருக்கிறது. ஏனெனில் தற்போது இருக்கின்ற நேரு விளையாட்டு அரங்கமே போதும் என்பதால்தான் அது குறித்து நடவடிக்கை எடுக்க வில்லை.